9. அறிவிப்புகள்

(அ) 1987-88 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை மொழிவது குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987–88 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, SUNDAR LAL KHURANA, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further Grants for the year 1987-88."

10 முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1987-88—விவாதமும் வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1987–88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை விவாதம். பேரவை விதிகளின்படி இந்த விவாதமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து, மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே கட்சிக்கு ஒருவர் பேசுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் மிகக் குறைவாகப் பேசி உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் தமிழை வளர்க்கக்கூடிய பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. மானியத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. நான் குறிப்பாக ஒன்றை உங்கள் மூலம் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். என் கையில் ஒரு சுற்றறிக்கை இருக்கிறது. 2–11–1987- விருந்து "All Officers in Madras circle" என்று சொல்லி இங்கே இருக்கக்கூடிய வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை. வங்கிகளிலே இருக்கக்கூடிய கோப்புகள் எல்லாம் ஆங்கிலத்தோடு கட்டாயமாக இந்தியிலும் ட்ரான்ஸ்லேட் செய்யப்படவேண்டும் என்றும் அதற்கு வசதி இல்லை என்று சொன்னால் அதற்கான வசதிகள் ரீஜினல் ஆபீஸிலே செய்து கொடுக்கப்படும்; இது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் சொல்லி மீண்டும்,